**1981 பிப்ரவரி 28]**

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைமையாசிரியர்களுக்கே இந்த அதிகாரத்தைத் தந்தால், அது தவிர்க்க முடியாத தவறுகள் கல்வித் துறையில் நடைபெறுகின்றன என்ற தப்பான எண்ணத்தை உருவாக்கும். அதைத் தடுப்பதற்காகத்தான், இன்னுமொரு இடத்திலேயிருந்து அவர்கள் அனுமதி யைப் பெற்று அல்லது தெரிவித்துவிட்டுச் செய்ய வேண்டும் என்ற கட்டுப் பாட்டை வைத்திருக்கிறோம். தவறு நடைபெறக்கூடாது என்பதற்காகத் தான் இது இருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமல்ல. அதனால் எல்லோரும் தவறு செய்வார்கள் என்பதுமல்ல. சில பேர் கூட தவறு செய்கின்ற வாய்ப்பு பெறக்கூடாது என்பதற்காகத்தான் அப்படி வைத்திருக்கிறோம். ஆனால் கால தாமதத்தைத் தவிர்க்க வேறு ஏதாவது செய்யலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினா எண் 101 ஒத்தி வைக்கப்படு கிறது.

சாதிச் சான்றிதழ்

* 102 வினா.—திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற மேலவையில் 29—10—1979 அன்று வினா எண் 34-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாணவர்களுக்கு நிரந்தரமாக சாதிச் சான்றிதழ் வழங்கும் பொருள் பற்றி அரசு முடிவு எடுத்து விட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) ஆம்.

(இ) சாதிச் சான்றிதழ் படிவங்கள் சாதிச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்ப படிவங்கள் அச்சில் உள்ளன.

திரு. செ. முத்துசாமி : இப்படி விரைவாக அரசு நடவடிக்கை எடுத்ததற் காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போலவே நிரந்தரமான சான்றிதழ்கள் தரும்போது, தாசில்தாரிடம் கையெழுத்துப் பெறும் சூழ்நிலை இல்லாமல், சிகப்புநாடா முறையை மாற்றி பிற்பட்டோர் போன்ற எல்லோருக் கும் அந்தச் சலுகை வழங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** இது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[1981 பிப்ரவரி 28

டாக்டர் இரா. சனார்த்தனம் : அந்தச் சான்றிதழை மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் வழங்குகிற உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தாழ்த்தப்பட்ட, பழங்குடி, மற்றும் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய போஸ்ட்-மெட்ரிக் மாணவர்களுக்கு முதற்கட்டமாக பாஸ்போர்ட் அளவில் கடினமான அட்டையில் நிரந்தர சாதிச் சான்றிதழை வழங்க இந்த அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி ஏறத்தாழ இருபத்தைந்தாயிரம் மாணவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் மேல் நிலைப் பள்ளிகளில் பயில்கின்ற இவ்வினங்களைச் சேர்ந்த எழாயிரம் மாணவர்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்கான ஆணையை 19—4—1980 அன்று அரசு வெளியிட்டுள்ளது.

திரு. க. சந்தோஷம் : கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய அரிசனங்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கும், இந்து மத அரிசனங்களுக்கு வழங்குவதைப் போலவே அதே உரிமைகளைத் தருகின்ற சாதிச் சான்றிதழ் வழங்கப்படுமா அல்லது வேறுவிதமாக வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : இப்போது வழங்கப்படுவது சாதிச் சான்றிதழ் மட்டும். மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துப்படி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : கல்லூரிகள், பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் பயில்கின்ற மாணவர்களை, பள்ளியில் சேர்க்கின்ற போது, என்ன சாதி என்று கேட்டு பதிவு செய்கிறார்கள். எனவே டி.சி.யில் என்ன சாதி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையே சாதிச் சான்றிதழாகப் பயன்படுத்தலாம் என்று உத்தரவு போட்டால் போதுமானது. வேலைக்கு விண்ணப்பம் செய்கிறபோது, தாசில்தாரிடம் சான்றிதழ் வாங்க வேண்டுமென்று உத்தரவு இருப்பதால், அதில் ஏற்படுகிற கஷ்டத்தை எடுத்துச் சொல்லி கேட்டுக் கொண்டார்கள்; அதே மாதிரி எம்.எல்.ஏ., எம்.எல்.சி. அவர்களிடமும் சான்றிதழ் வாங்குகிறார்கள். சிறைச்சாலைக்குப் போய் வந்தவர்களுக்குக் கூட நாம் நற்சான்றிதழ்களைக் கொடுத்துவிடுகிறோம். ஆகவே அந்த நிலை இல்லாமல் பள்ளியில் படிக்கிற போது வழங்கிய சான்றிதழையே பயன்படுத்திக் கொள்ளலாம் என்று உத்தரவு போட்டால், இந்த இரட்டைப் பணியைத் தவிர்க்கலாம். இதுபற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

1981 பிப்ரவரி 28]

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இது சம்பந்தமாக நான் முன்பு ஒரு முறை மேலவையில் எழுப்பியபோது, அப்போதிருந்த அமைச்சர் இதுபற்றி நிரந்தரமான ஒரு ஏற்பாட்டைச் செய்வதாகச் சொன்னார். சான்றிதழ் போல் அல்லாமல் நிரந்தரமான அடையாள அட்டையாகக் கொடுப்பதுபற்றி முடிவு செய்யப் போகிறோம் என்று சொன்னார். இப்போது அமைச்சர் அவர்கள் சொல்லுவது, சாதிச் சான்றிதழா அல்லது அடையாள அட்டையா என்பதைத் தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்தை அரசு பரிசீலனை செய்தால், அது இன்னும் எளிதாக, முறையாக இருக்கும். அது குறித்து அமைச்சர் அவர்களுடைய கருத்து என்னவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** நான் ஏற்கெனவே ஒரு கேள்விக்கு பதில் அளித்ததைப் போல, முதற்கட்டமாக பாஸ்போர்ட் அளவில் கடினமான அட்டை—நிரந்தரச் சான்றிதழை—வழங்க அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதன்படி சாதிச் சான்றிதழ்களை வழங்கியிருக்கிறோம்.

**திரு. த. சந்தோஷம் :** கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய அரிசனங்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும் என்றும், சாதிச் சான்றிதழ் வழங்கப் பட்டது என்றும் சொன்னார்கள். சலுகைகள் இல்லாமல் அடையாள அட்டையை மட்டும் வழங்குவதால் என்ன பயன் இருக்கும்? இருக்கின்ற சலுகைகள் கிடைக்காமல் செய்வதற்கு அது உதவுமே தவிர, சலுகைகளைக் கொடுக்க உதவாது. ஆகவே அரசு அதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாணவர்கள் சாதிச் சான்றிதழ் வேண்டும் என்று விண்ணப்பிக்கின்றபோது, அவர்களுக்கு நடைமுறையில் இருக்கின்ற சிரமங்களைப் போக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் அரசு இதை மேற்கொண்டிருக்கிறது. கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய மற்றவர் களுக்கும் இந்தச் சலுகையை இந்த அரசு வழங்குகிறது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அவையில் உறுப்பினர் உறங்கலாமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]